**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சிறப்புப் பள்ளிகள் – அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் உடல் பாதிப்படைந்த வாய் பேச இயலாத /காது கேளாத/ பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு 2013–2014ஆம் கல்வி ஆண்டிற்கு விலையில்லா பாட புத்தகங்கள் வழங்குதல் செலவினம் ரூ.6,96,552/– அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந 2(1))த் துறை

அரசாணை (நிலை) எண்.08 | நாள்:28–02–2014
விஜய, மாசி16,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கவும்:

1. அரசாணை(நிலை) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை நாள்21–02–2013.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2771/சிபதி/2013, நாள் 24.9.13 மற்றும் 8.11.13.

---------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனப் பள்ளிகளில், ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு, தமிழ்நாடுப் பாடநூல் கழகத்திடமிருந்து பாடப் புத்தகங்களைப் பெற்று இலவசமாக வழங்கிடும் வகையில் 2012–13 ஆம் ஆண்டிற்கு ரூ.4,85,000/– செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், 2012–13 ம் நிதியாண்டிற்கு பார்வைத்திறன் குறைபாடு, செவித்திறன் குறைபாடு மற்றும், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ.4,85,000/–ல், ரூ.4,61,920/– செலவினம் மேற்கொள்ளப்பட்டு மீதித் தொகை ரூ.23,080/– அரசு கணக்கில் செலுத்தப்பட்டது என்றும், மேலும், தமிழ்நாடு பாடநூல் கழகத்திடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி, அக்கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.4,40,113/–ல் ரூ.2,00,000/– மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு பாடநூல் நிறுவன இயக்குநர் கடிதத்தின்படி முதற்கட்டமாக விநியோகிக்கப்பட்ட பாடபுத்தகங்களான கட்டணத் தொகையில் நிலுவைத் தொகை ரூ.2,40,113/– மற்றும் மூன்றாம் பருவம் மற்றும் முதல், இரண்டாம் பருவ கூடுதல் விநியோகம் ஆகியவற்றிக்கான தொகை ரூ.4,56,439/– ஆக மொத்தம் ரூ.6,96,552/– கடந்த நிதியாண்டிற்கான நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து, தற்போது இத்திட்டத்தின் கீழ், இக்கல்வியாண்டிற்கு விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.11,75,238/– மற்றும் 2012–13 ஆம் நிதியாண்டிற்கான நிலுவைத் தொகை ரூ.6,96,552/– என மொத்தம் ரூ.18,71,790/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ

தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப் பெறும் சிறப்புப் பள்ளிகளில், ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு 2012–13 ஆம் கல்வி ஆண்டிற்கு விலையில்லா பாட புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிய வகையில் நிலுவையில் உள்ள ரூ.6,96,552/– (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐநூற்றி ஐம்பத்து இரண்டு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு வழங்கிட ஏதுவாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.6,96,552/– பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| i | “2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I– திட்டத்தில் சேராதது – CC –காது கேளாதவர்களுக்காக புதிய பள்ளிகளையும், மேனிலைப் பள்ளிகளையும் தொடங்குதல்–68 புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு ”.<br>(த.தொ. கு. 2235–02–101–CC–6809) | ரூ.46,816/– |
| ii | 2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I– திட்டத்தில் சேராதது – BE– கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி. 68– புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு”.<br>(த.தொ. கு. 2235–02–101–BE–6806) | ரூ.6,49,736/– |

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. மேலும் 2013–14 ஆம் நிதியாண்டிற்கு, அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 1 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா பாடபுத்தகங்கள் வாங்கி வழங்குவதற்கு தமிழ்நாடு பாடநூல் கழகத்திடமிருந்து பட்டியல் பெற்று புதியதாக அரசுக்கு கருத்துரு அனுப்பி நிதி ஒப்பளிப்பு பெற்றுக் கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.6882/நிதி(சந)/14,நாள் 26.2.14–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.

**<u>நகல்:-</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.